ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய

# ஸ்ரீ கணேச பஞ்சரத்னம்.



6879

பப்ளிஷர்ஸ் :

...ரி ப்ரஸ், திருவல்லிக்கேணி.

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய

# ஸ்ரீ கணேச -
# பஞ்சரத்னம்


சாஸ்த்ர ரத்னகர

தேதியூர் ப்ரும்மஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய சாஸ்த்ரி



பப்ளிஷர்ஸ் :

**கிரி ப்ரஸ், திருவல்லிக்கேணி.**



*All Rights Reserved by the Publishers.*

**THIRD**
**EDITION**
**Dec. 1952**

விலை அணா 4.

*Printed & Published*
by K. Kylasamier
at GIRI PRESS,
Triplicane :: Madras.

# முன்னுரை.

ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத்பாதாள் அருளிய அநேக க்ரந்தங்களில் ஒன்ருன ஸ்ரீ கணேச பஞ்சரத்னம் என்ற இந்தப் புஸ்தகத்தின் முதல் இரண்டு பதிப்புக்கள் ஆஸ்திக மகா ஜனங்களால் ஆதரவுடன் ஏற்றுக்கொள்ளப் பட்டு, வெகு சீக்கிரத்தில் செலவாகி விட்டபடியால் இப்புஸ்தகத்தின் மூன்ருவது பதிப்பை மிகுந்த சந்தோஷத்துடன் வெளியிடுகிறேன். இது வரையில் என்ஞல் வெளியிடப்பட்டுள்ள, 'ஸ்ரீ ஸௌந்தர்யலஹரீ', 'ஸ்ரீ சங்கர விஜயம்', 'ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்கம்', 'கனகதாரா ஸ்தோத்ரம்', 'ஆனந்த லஹரீ' 'ஸ்ரீ சாரதாஷ்டகம்', லலிதா பஞ்சரத்னம்', 'த்ரிபுர ஸுந்தரி ஸ்தோத்ரம்', 'கௌரீதசகம்', 'ஹனுமத் பஞ்சரத்னம்', முதலிய நூல்களை விருப்பி ஏற்றுக் கொண்ட ஆஸ்திகர்கள் இச்சிறு நூலையும் ஏற்றுக் கொள்ளுவார்களென நினைக்கிறேன்.

இதைத் தொடர்ந்து, ஸ்ரீமத் பகவத் பாதாள் அருளிச் செய்துள்ள இதர க்ரந்தங்களையும் ஒவ்வொன்றாக வெளியிடவேண்டுமென்று தீர்மானித்துள்ளேன். இக்காலத்தில் புஸ்தகங்களை ப்ரசுரிப்பதில் உள்ள இடையூறுகளை நேயர்கள் நன்கறிவார்கள். பொது ஜனங்களின் அபிமானமும் ஆதரவும் பரிபூர்ணமாக இருந்தாலன்றி புஸ்தகங்கள் வெளியிட இயலாது.

ஸ்ரீமத் சங்கரரது அருளும், அன்பர்களின் ஆதரவும் இருந்தாலன்றி நான் தீர்மானித்துள்ள காரியம் முடிவு பெறுவது துர்லபம்.

ஆகையால் நான் மேற்கொண்டுள்ள இக்கார்யத்தில் அன்பர்கள் அனைவரும் எனக்கு ஊக்கமளிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

திருவல்லிக்கேணி,
20.12.1952

K. கைலாஸமய்யர்,
பதிப்பாளர்.

உ



# ஸ்ரீ கணேச பஞ்சரத்னம்.

मुदा करात्तमोदकं सदा विमुक्तिसाधकं
कलाधरावतंसकं विलासिलोकरक्षकम् ।
अनायकैकनायकं विनाशितेभदैत्यकं
नताशुभाशुनाशकं नमामि तं विनायकम् ॥ १ ॥

नतेतरातिभीकरं नवोदितार्कभास्वरं
नमत्सुरारिनिर्जरं नताधिकापदुद्धरम् ।
सुरेश्वरं निधीश्वरं गजेश्वरं गणेश्वरं
महेश्वरं तमाश्रये परात्परं निरन्तरम् ॥ २ ॥

समस्तलोकशंकरं निरस्तदैत्यकुञ्जरं
तरेतरोदरं वरं वरेभवक्त्रमक्षरम् ।
कृपाकरं क्षमाकरं मुदाकरं यशस्करं
मनस्करं नमस्कृतां नमास्करोमि भास्वरम् ॥ ३ ॥

अकिंचनार्तिमार्जनं चिरंतनोक्तिभाजनं

पुरारिपूर्वनन्दनं सुरारिगर्वचर्वणम् ।

प्रपञ्चनाशभीषणं धनंजयादिभूषणं

कपोलदानवारणं भजे पुराणवारणम् ॥ ४ ॥

नितान्तकान्तदन्तकान्तिमन्तकान्तकात्मजम्

अचिन्त्यरूपमन्तहीनमन्तरायकृन्तनम् ।

हृदन्तरे निरन्तरं वसन्तमेव योगिनां

तमेकदन्तमेकमेव चिन्तयामि संततम् ॥ ५ ॥

महागणेशपञ्चरत्नमादरेण योऽन्वहं

प्रजल्पति प्रभातके हृदि स्मरन्गणेश्वरम् ।

अरोगतामदोषतां सुसाहितीं सुपुत्रतां

समाहितायुरष्टभूतिमभ्युपैति सोऽचिरात् ॥ ६ ॥

# ஸ்ரீ கணேச பஞ்சரத்னம்

முதா கராத்தமோதகம் ஸதா விமுக்தி ஸாதகம்
கலாதராவதம்ஸகம் விலாஸிலோக ரக்ஷகம் ।
அநாயகைகநாயகம் விநாஶிதேபதைத்யகம்
நதாஶுபாஶுநாஶகம் நமாமிதம் விநாயகம் ॥1॥.

நதேதராதிபீகரம் நவோதிதார்கபாஸ்வரம்
நமத்ஸுராரிநிர்ஜரம் நதாதிகாபதுத்தரம் ।
ஸுரேஶ்வரம் நிதீஶ்வரம் கஜேஶ்வரம் கணேஶ்வரம்
மஹேஶ்வரம் தமாஶ்ரயே பராத்பரம் நிரந்தரம் ॥2॥

ஸமஸ்தலோகஶங்கரம் நிரஸ்ததைத்யகுஞ்ஜரம்
தரேதரோதரம் வரம் வரேபவக்த்ரமக்ஷரம் ।
க்ருபாகரம் க்ஷமாகரம் முதாகரம் யஶஸ்கரம்
மநஸ்கரம் நமஸ்க்ருதாம் நமஸ்கரோமி பாஸ்வரம் ॥3॥

அகிம்சநார்திமார்ஜநம் சிரம்தநோக்திபாஜநம்
புராரிபூர்வநந்தநம் ஸுராரிகர்வசர்வணம் ।
ப்ரபஞ்சநாஶபீஷணம் தநம்ஜயாதிபூஷணம்
கபோலதாநவாரணம் பஜே புராணவாரணம் ॥4॥

நிதாந்தகாந்த தந்தகாந்திமந்தகாந்தகாத்மஜம்
அசிந்த்யரூபமந்தஹீநமந்தராயக்ருந்தநம் ।
ஹ்ருதந்தரே நிரந்தரம் வஸந்தமேவ யோகிநாம்
தமேகதந்தமேகமேவ சிந்தயாமி ஸந்ததம் ॥ 5 ॥

மஹாகணேசபஞ்சரத்நமாதரேண யோந்வஹம்
ப்ரஜல்பதி ப்ரபாதகே ஹ்ருதி ஸமரந்கணேச்வரம் ।
அரோகதாமதோஷதாம் ஸுஸாஹிதீம் ஸுபுத்ரதாம்
ஸமாஹிதாயுரஷ்டபூதிமப்யுபைதி ஸோசிராத் ॥6॥



உ

# ஸ்ரீ கணேச பஞ்சரத்னம்.

मुदा करात्तमोदकं सदा विमुक्तिसाधकं
कलाधरावतंसकं विलासिलोकरक्षकम् ।
अनायकैकनायकं विनाशितेभदैत्यकं
नताशुभाशुनाशकं नमामितं विनायकम् ॥ १ ॥

முதா கராத்தமோதகம் ஸதா விமுக்தி ஸாதகம்
கலாதராவதம்ஸகம் விலாஸிலோக ரக்ஷகம் ।
அநாயகைகநாயகம் விநாஶிதேபதைத்யகம்
நதாஶுபாஶுநாஶகம் நமாமிதம் விநாயகம் "1".

தாத்பர்யம்:—

"ஸ்ரீ மஹாகணபதியானவர் கையில் கொழுக்கட்டையை வைத்துக்கொண்டு ஸந்தோஷமாகவும், தன்னை அண்டியவர்களுக்கு மோக்ஷத்தைக் கொடுக்கிறவராயும், சந்த்ரகலாதரனாயும், தன்னுடைய சரித்திரத்தை வெளிப்படுத்தும் கீர்த்தனைகளை பாடித் தானும் ஆனந்தித்து, அன்யர்களையும் ஆனந்திக்கச் செய்யும் பக்தர்களை ரக்ஷிக்கின்றவராயும், நாதனில்லாத

ஜனங்களுக்கு ஆபத்காலத்தில் முக்யமான நாத ஞயும், கஜாஸுரனைக் கொன்றவராயும், தன்னை நமஸ்கரித்த ஜனங்களுடைய பாபத்தை நாசம் செய்கின்றவராயும் விளங்குகின்ருர். இவ்வித மஹிமையுள்ள மஹாகணபதியை நான் நமஸ்கரிக்கின்றேன்.

இந்த ஸ்லோகத்தின் முதல் விசேஷணத்தால் ப்ராணிகளுக்குத் தத்வோபதேசம் செய்யப்படுகிறது. அதாவது கையில் கொழுக்கட்டையை வைத்துக் கொண்டிருக்கிருர் கணபதி. கொழுக்கட்டையினுடைய உள் பாகத்திலுள்ள வஸ்துவிற்கு பூர்ணம் என்று பெயர். இதைத்தான் நாம் எடுத்து புசிக்கிரும். மேல்பாகம ரஸமில்லாததால் அதைத் தள்ளிவிடுகிரும். அதுபோலவே, ப்ராணிகளுடைய சரீரமானது ரசமற்ற வஸ்துவானதினல், அதைத் தள்ளிவிட்டு, அதற்குள் பரிபூர்ணமாக விளங்கிவரும் ஆத்ம சைதன்யத்தை அனுபவிக்கவேண்டும். இது தான் ஸகல வேதாந்தங்களுடைய ஸித்தாந்தமாகும்.

இரண்டாவது விசேஷணத்தால் இவ்விதம் அந்தர்முகர்களாக ஆத்மஸ்வரூபத்தை அனுபவித்து வரும் ஜனங்களுக்கு மஹாகணபதி மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியவர் என்பது வெளியாகிறது.

மூன்ருவது விசேஷணத்தால், சந்த்ரகலையை தன் சிரஸில் தரிக்கிருர் என்பது தெரிகிறது. ஒரு ஸமயத்தில் விளையாடிக்கொண்டிருக்கும் தமது இரு குழந்தைகளான மஹாகணபதியையும் ஸுப்ரமண்ய ஸ்வாமியையும் கண்டு பரமானந்தத்தை அடைந்தவர்களான

பார்வதி பரமேச்வரர்களில், ப்ரமேச்வரன் தன் கையில் ஒரு விளாம்பழத்தை வைத்துக்கொண்டு "உங்கள் இருவர்களுள் யார் பூமியைப் ப்ரதக்ஷிணம் செய்து முதலில் வருகிறீர்களோ, அவர்களுக்கு இந்தப் பழத்தை தருகிறேன்" என்று சொன்னார். குமாரஸ்வாமி விளாம்பழத்தை மாத்ரம் பந்தய வஸ்துவாக ஒப்புக்கொண்டார். மஹாகணபதியோ, "பூமியைப் ப்ரதக்ஷிணம் செய்தவனுககு இந்த அல்பமான விளாம்பழம் போதாது, அத்துடன் வேறு ஏதாவது ஒரு பெரிய வஸ்துவையும் பந்தயமாக வைக்கவேண்டும்" என்றார். பரமேச்வரனே, "நீ பூமியை ப்ரதக்ஷிணம செய்துவிட்டு வந்தால், உன்னிஷ்டம் எதுவோ அதைக்கொடுக்கிறேன்" என்றார். மஹாகணபதியும், "முன்பே பந்தய வஸது தீர்மானமாகிவிடவேண்டும்" என்று சொல்லி, "நான் பூமியை ப்ரதக்ஷிணம் செய்து வருகிறேன், விளாம்பழத்தையும் கொடுக்கவேண்டும், தங்கள் தலையில் அலங்காரமாக விளங்கிவரும் சந்த்ர கலையையும் கொடுத்துவிடவேணடும்" என்று கேட்டுக்கொண்டார். பரமேச்வரனும், பூமியை ப்ரதக்ஷிணம் செய்துவிட்டுவரும்பொழுது பார்த்துக்கொள்ளலாமென்ற எண்ணத்துடன் ஸம்மதித்துவிட்டார். ஸுப்ரமண்யஸ்வாமி, 'நான் அப்படி செய்துவிட்டால் எனக்கே கொடுத்துவிடவேண்டும்' என்றார். பரமேச்வரனும் ஸம்மதித்தார். குமாரஸ்வாமி உடனே தனது வாஹனமான மயிலில் ஏறிக்கொணடு பூமியை ப்ரதக்ஷிணம் செய்துவரப் புறப்பட்டார். மஹாகணபதியோ, அங்கிருந்துகொண்டே த்யான

மஹிமையினுல் ஸ்வர்க்க லோகத்திலிருந்து காம தேனுவை வரவழைத்து, பரமேச்வரனுக்கு எதிரில் நிறுத்தி, ப்ரதக்ஷிணம் செய்துவிட்டு, கோவினுடைய ஒரு ரோம கூபத்திலேயே ஸகல பூமண்டலமும் அடங்கிவிட்டதென்பதற்கும், கோவை ப்ரதக்ஷிணம் செய்தால், பூமியை ப்ரதக்ஷிணம் செய்ததாக ஆகு மென்பதற்கும் சாஸ்த்ர ப்ரமாணங்களை விவரித்துக் காட்டி, விளாம்பழத்தையும், பரமேச்வரனின் தலையி லுள்ள சந்த்ரகலையையும் பரிசாக வாங்கிக்கொண்டு விட்டார். இதுமுதல்தான், சந்த்ரகலாதரனுக ஆனுர். இதனுல் கோவைப் பூஜிக்கின்றவர்களுக்கு ஸர்வ ஸௌபாக்யமும் ஏற்படும் என்று வெளியாகிறது. ஆகையால் கோ ஸம்ரக்ஷணம் மிகவும் அவச்யமானது. ஆத்மஞானத்திற்கும் காரணமானது என்பது வெளிப் படுத்தப்படுகிறது.

நான்காவது விசேஷணத்தால் ஆத்மஞானத்திற் குக் காரணமான பக்தியைப் பற்றி சொல்லப்படு கிறது. மஹாகணபதியினுடைய திருநாமங்களை ஸங் கீர்த்தனம் செய்வதும், மஹாகணபதியினுடைய கல் யாணகுணங்களைச் சொல்வதும், காணபத்ய மதத்தை அறிந்துகொள்வதும், கணபதி புராணத்தைப் படித்து அன்யர்களுக்கு உபதேசித்தலும், மஹாகணபதி மந் த்ர ஜபமும், சுக்ல சதுர்த்தி வ்ரத அனுஷ்டானமும் மஹாகணபதியினுடைய பக்தியாகும்.

ஐந்தாவது விசேஷணத்தால், பார்யை, புத்ரன் முதலானவர்கள், இஹலோகத்தில் தன்னை ரக்ஷிக்கின்ற பந்துக்கள்போல் தோன்றினுலும் பரலோகத்தில்.

அவர்களால் யாதொரு ப்ரயோஜனமுமில்லை. மஹாகணபதிதான் பரலோகத்தில் பந்துவாக ஆக வேண்டும். ஆகையால் இஹலோகத்தில் அவரை அவசயம் பக்தி செய்யவேணடுமென்பது வெளியா கிறது.

ஆருவது விசேஷணத்தால், அவர் 'கஜாஸுரனைக் கொன்ற வீரன்' என்ற மஹாகணபதியின் உத்கர்ஷத்தைக் காட்டி, அவரை பக்திசெய்யவேண்டியதவச்யமெனபது வெளிப்படுத்தப்படுகிறது. த்ரிபுராஸுரனுடன் பரமேச்வரன் யுத்தம் செய்யுங்காலத்தில், பரமேச்வரனேடு போர் செய்த த்ரிபுராஸுரன் தோல்வி அடைநத ஸமயத்தில், சிக்ஷுரன் எனற தன்னுடைய ப்ரதான ஸேஞதிபதியை ரஹஸ்யமாக அழைத்து, "தபஸ் சக்தியினுல் உனக்கு எந்த உருவத்தை வேணடுமாஞலும் எடுத்துககொள்ள சக்தி உடைடு. பரமேச்வரனையோ, நமமால் வீர்யத்தால் ஜயிக்க முடியவில்லை. ஆகையால், மாயையால் வஞ்சிததுத்தான ஜயிக்கவேணடும். நீ மாயையினுல தேவ லோகத்திலுள்ள ஐராவதம் எனற யானையைப்போல் உருவத்தை எடுததுககொணடு, பரமேச்வரனிடம் சென்று, "தாங்கள் செய்யும் யுத்தம் தங்களுடைய ப்ரயோஜனத்தைக் குறித்ததல்ல; தேவர்களுடைய கார்யமாகையால், இநதரன் எனனைத் தங்களுககு அனுப்பி இருக்கிருன். ஆகையால் என்மீது தாஙகள் ஏறிக்கொண்டு த்ரிபுராஸுரனுடன் யுத்தம் செய்ய வேண்டும்'' என்று தந்திரமாகச் சொல்லி, பரமேச்வரன் உன் வார்த்தையில் மயக்கத்தை அடைந்து,

ஏதாவது ஒருதினத்தில் ரதத்தில் ஏருமல் உன்மீது ஏறிக்கொண்டு யுத்தத்திற்கு வருங்காலத்தில், நீ அடக்கமுடியாத மதத்தை அடைந்து, அவரை த்வம் ஸம்செய்து என்னை ரக்ஷிக்கவேண்டும்" என்று ப்ரார்த்தித்துக்கொண்டான். உடனே அவன் பரமேச்வரனிடம் சென்று, த்ரிபுராஸுரன் வேண்டிக்கொண்டபடி செய்தான். பரமேச்வரனும், இது இந்த்ரனல் அனுப்பப்பட்ட ஐராவதம் என்றே நினைத்து, அந்த யானைமீது ஏறிககொண்டு யுத்தத்திற்குப் புறப்பட்டார். இந்த ஸந்தர்ப்பத்தில் வ்யாமோஹம் ஏற்பட்டுவிட்டது. ஸமீபத்திலிருந்த மஹாகணபதி இதை அறிந்து, "ஹே குரோ! இவன் அஸுரன், யானை அல்ல. பூமியே தங்களுக்கு ரதமாக இருக்கும் பொழுது, இந்த்ரன் எதற்காக ஐராவதத்தை அனுப்பப்போகிருன். தாங்கள் கீழே இறங்கவேண்டும்" என்று தன் தகப்பனுரைக் கீழே இறக்கிவிட்டு, தன் தும்பிக்கையால் அந்த யானையினுடைய தும்பிக்கையை இழுத்து, வெகுகாலம் யுத்தம் செய்து, யானையைப் போல் வேஷம் தரித்து வந்த அந்த சிக்ஷுரன் என்ற அஸுரனை த்வம்ஸம் செய்தார். பரமேச்வரனுக்கும் ஏற்பட்ட வ்யாமோஹத்தை நிவர்த்தி செய்துவைத்த ப்ரபுவானதினல், பக்திக்குப் பாத்ரம் மஹாகணபதி என்ற ஒரே தெய்வம்தான் என்பது வெளியாகிறது.

ஏழாவது விசேஷணத்தால் மஹாகணபதியினுடைய நாம ஸங்கீர்த்தனம் முதலியவைகளைச் செய்ய சக்தியில்லாத ஜனங்கள் பக்தி செய்ய

வேண்டிய ப்ரகாரமானது சொல்லப்படுகிறது. அதாவது, மூடஜனங்களும், தண்டாகாரமாக நமஸ்கரித்தால் போதும். அவர்களுடைய பாபங்களையும் போக்கடித்து ரக்ஷிக்கின்றவர் என்பது வெளிப்படுத்தப்படுகிறது.

விநாயகம் என்ற பதத்தால் வெளியாகும் அர்த்தத்தை அடியிற்கண்டபடி அறியவும். லலிதா பரமேசவரியானவள் தன்னுடைய சக்தி சேனைகளைக் கொண்டு, பண்டாஸுரனுடன் யுத்தம் செய்யுங் காலத்தில், பண்டாஸுரன் விக்ன யந்த்ரம் என்ற யந்த்ரத்தை ஸ்தாபனம் செய்து, சக்தி ஸேனைகளுக்கு யுத்தத்தில் உத்ஸாஹமில்லாமலும், பாணப்ரயோகம் செய்யும் வழியே மறந்துபோகும்படியும், அப்படித் தவறி பாணப்ரயோகம் செய்தாலும், விக்ன யந்த்ரத்தைத் தாண்டி தன ஸேனைகள்மீது விழாமலிருக்கும்படியும் ஏற்பாடு செய்தான். சக்தி ஸேனைகள் தோல்வி அடைந்துவிட்டன. இதை அறிந்த லலிதா பரமேச்வரியானவள் தன் த்ருஷ்டியினால் காமேச்வரனுடைய முகத்தைப் பார்ப்பது என்ற உபாயத்தாலேயே மஹாகணபதியை உண்டுபண்ணினாள். அந்த மஹாகணபதியும் விகன யந்த்ரத்தை பேதித்து விட்டார். உடனே சக்திஸேனைகள் மிக உத்ஸாஹத்துடன் போர் செய்து, பண்டாஸுரனைக் கொன்றதாக லலிதோபாக்யானத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மஹாகணபதியினால் விக்ன யந்த்ரம் பேதிக்கப்பட்ட காரணத்தால் அந்த யந்த்ரத்திற்கு அதிதேவதைகள் மஹாகணபதியினிடம், “இனி எங்களுக்கு

தாங்கள்தான் யஜமானன், தாங்கள் பார்த்து எங்கு அனுப்புகிறீர்களோ, அங்கு செல்கிறோம். எங்கு போகக்கூடதென்று சொல்கிறீர்களோ அந்த திக்கே செல்லவில்லை" என்று ப்ரார்த்தித்துக்கொண்டார்கள். இது முதல் மஹாகணபதியும், விக்ன யந்த்ரத்தின் அதிதேவதைகளைத் தன் ஸேனைகளாகச் செய்து கொண்டு, வி என்றால் விக்கினங்கள், நாயகம் என்றால் அரசன் என்ற அர்த்தத்தை ஸூசிக்கும் विनायकः (விநாயக:) என்ற திருநாமத்துடன் விளங்கினார். ஆகையால் மோக்ஷத்திற்குக் காரணமான ஞானத்தை அடைய மஹாகணபதியை பக்தி செய்யாதபோனாலும், ஜனங்கள் ஆரம்பிக்கும் வைதிக, லௌகிக கார்யங்களுக்கு விக்னம் வராமல் மங்களகரமாக முடிவு பெறவேண்டுமானால், மஹாகணபதியை உபாஸிக்க வேண்டியது மிகவும் அவச்யம் என்பது இதன் கருத்தாகும்.

---

नतेतरातिभीकरं नवोदितार्कभास्वरं
नमत्सुरारिनिर्जरं नताधिकापदुद्धरम् ।
सुरेश्वरं निधीश्वरं गजेश्वरं गणेश्वरं
महेश्वरं तमाश्रये परात्परं निरन्तरम् ॥ २ ॥

நதேதராதிபீகரம் நவோதிதார்கபாஸ்வரம்
நமத்ஸுராரிநிர்ஜரம் நதாதிகாபதுத்தரம் ।
ஸுரேஶ்வரம் நிதீஶ்வரம் கஜேஶ்வரம் கணேஶ்வரம்
மஹேஶ்வரம் தமாஶ்ரயே பராத்பரம் நிரந்தரம் ॥2॥

தாத்பர்யம் :—

" தன்னை வணங்கி பூஜை செய்யாதவர்களுக்கு அடிக்கடி பயத்தைக் கொடுத்து சிக்ஷிக்கிறவராயும் ப்ராதக்காலத்திலுதித்த பாலஸூர்யனைப்போன்ற காந்தியோடு கூடினவராயும், தன்னை நமஸ்கரித்து பூஜிக்கின்ற தேவர்களுக்கு சத்ருவான அஸுரர்களை அடியோடு ஒழித்துவிடுகிறவராயும், தன்னை நமஸ் கரித்தவர்களை பெரிய ஆபத்திலிருந்தும் விடுதலை செய்து வைக்கிறவராயும், தேவர்களுக்கு அதிபதியா யும், பக்தனுக்கு புதையலை உண்டுபண்ணிக்கொடுக் கிறவராயும், (அதாவது புதையல் ஸொத்துக்கு அதி தேவதையாயும்) யானைகளுக்கு அதிபதியாயும், சண் டிகேச்வரர் முதலான ப்ரதம கணங்களுக்கு நாதனுயும், ஈச்வரனுக்கும் மேலானவராயும், ஜகத்திற்குக் காரண மானதினுல், பரம் என்று சொல்லப்படும் மாயையைக் காட்டிலும் மேலானவராயும், அதாவது மாயா ஸம பந்தமில்லாதவராயும் விளங்கிவரும் மஹாகணபதியை இடைவிடாமல் ஆச்ரயிக்கிறேன்."

இதனுல், தன்னை உபாஸிக்கின்றவர்களுக்கு அபீஷ்டத்தைக் கொடுத்து ரக்ஷிக்கிறவர் என்றும், தன்னை உபாஸிக்காமலிருப்பவர்களை, அவர்கள் எந்த கார்யத்தை ஆரம்பித்தாலும், அதை முடிவு பெருமல் நடுவில் தடுத்து அவர்களை நாசம் செய்கிற வர் என்றும் தெரிகிறபடியால் அவச்யம் மஹா கணபதியை மத பேதமில்லாமல் உபாஸித்தே ஆகவேண்டும்.

இந்த ச்லோகத்திலுள்ள गजेश्वरं (கஜேச்வரம்) என்ற விசேஷணத்தால் மஹாகணபதிக்கு யானை முகம் ஏற்பட்டதின் காரணமானது ப்ரகாசப்படுத்தப் படுகிறது. அதாவது:—

முன்காலத்தில் கஜாஸுரன் என்ற பெயருடன் ஓர் அஸுரன் இருந்தான். அவன் பரமசிவனை உத்தேசித்து தபஸ் செய்து, பரமசிவனைத் தனக்கு ஸ்வாதீனமாகச் செய்துகொண்டவன். சிவனிடம் வரம் பெற்றுக்கொண்டபொழுது, "தங்களுடைய வாஹனமாகிய யானையின் முகத்தைப்போலுள்ள முகமுள்ள சத்ருமூலமாக எனக்கு மரணம் ஏற்படவேண்டுமே தவிர, வேறு யார் மூலமாகவும் வதம் ஏற்படக்கூடாது" என்று கேட்டுக்கொண்டான். இந்த அஸுரன் லக்ஷ்மீநரஸிம்ம மந்த்ரத்தை, நாரத மஹர்ஷி மூலம் உபதேசம் செய்துகொண்டு, அந்த மந்த்ரத்தை ஸித்தி செய்துவந்தவன். இதனால் இவனுடைய அருகில் வரும் யானைகள் இவனைப் பார்க்கும்பொழுது அவைகளின் த்ருஷ்டிக்கு ஸிம்மம் போல் தோன்றினபடியால், இவனைக் கண்ட மாத்ரத்தில், யானைகள் அரண்டு பயத்தால் பரித்து விடும். இதனால் எந்த யானையும் தனது அருகில் வர முடியாதபடி ரக்ஷை இருப்பதினால், யானை முகத்தைத் தவிர, மற்றவர்கள்மூலம் தனக்கு வதம் கூடாதென்றும், யானை முகத்துடன் கூடியவன் மூலமாகத்தான் வதம் ஏற்படவேண்டுமென்றும் சிவனிடம் வரம் பெற்றுக்கொண்டான்.

மேலும் சிவனுக்கு வாஹனமான யானையின் முகத்தை தனக்கு நினைத்தமாத்திரத்தில் எடுத்துகொள்ளும் சக்தியையும், அக்காரணத்தால் சிவனாலும் தனக்கு வதம் ஏற்படக்கூடாததான மஹிமையையும் தனக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டான: ஆகவே, சிவனைத் தவிர மற்றவர்கள் மூலமாக வதம் கூடாது என்று தீர்மானம் ஆகிவிட்டது. தன் வாஹனத்தைப்போல் அந்த அஸுரனுக்கு உருவம் எடுத்துக்கொள்ளும் சக்தியைக் கொடுத்துவிட்டபடியால், சிவனாலும அவனைக் கொல்ல முடியவில்லை. யானை முகத்துடன் கூடியவன் மூலம் அவன் தனக்கு வதத்தை ஸம்மதித்தாலும் அவனிடமுள்ள நரஸிம்ம மந்த்ர மஹிமையினால், மற்ற யானைகளும் அவனிடம் செல்லமுடியவில்லை. இதனால் மிகவும கர்வத்தை அடைந்து, லோகத்தை பிடிக்கும் காலத்தில், தேவர்கள், பார்வதி பரமேச்வரர்களை சரணமடைந்து, இந்த அஸுரனால் ஏற்படும் பீடைகளைத் தெரிவிக்கும் பொழுது, பார்வதி பரமேச்வரர்களும், "மிகவும் சீக்ரமாக அந்த அஸுரனைக கொல்வதற்கான வழியைத் தேடுகிறோம்" என்று சொல்லி, தேவர்களுக்கு அபய ப்ரதானம் செய்தார்கள். உடனே பார்வதியினுடைய த்ருஷ்டியானது பரமேச்வரனிடமும், பரமேச்வரனுடைய த்ருஷ்டியானது பார்வதியினிடமும் ஏற்பட்டு இரண்டு த்ருஷ்டிகளும் ஒன்றாகச் சேர்ந்து, ஓர் அபூர்வமான தேஜஸ் உருவத்துடன், மஹாகணபதி என்ற பெயருடன் ஆவிர்பவித்தது மனோபாம்வ எல்லாவற்றிலும் பெரிதாகையினால் கஜாஸுரன்

மூலமாக லோகத்திற்கு ஏற்பட்டிருக்கும் பீடையை நினைத்து, நினைத்து, யானையின் முகத்துடன்கூடிய அந்த அஸுரனுடைய பாவனையானது பார்வதி பரமேச்வரர்களுக்கு அதிகமாக இருந்ததிலிருந்தும், அந்த இருவர்களுடைய தேஜஸ்ஸும் யானையின் முகத்தைப்போல் உள்ள முகத்துடன்கூடிய உருவமாக உதித்தது. இந்த மூர்த்தி நரஸிம்ம மந்த்ரத்தை ஸித்தி செய்த கஜாஸுரனையும் ஸம்ஹாரம் செய்து லோகத்திற்கு நன்மையைச் செய்த காரணத்தால், கஜேச்வரன் என்ற பெயரை அடைந்தார். 'இதனல் நரஸிம்மத்தையும் கட்டுப்படுத்தக்கூடிய மந்த்ர ரஹஸ்யம், மஹாகணபதியின் தத்வத்தில் அடங்கியிருக்கிறது கணபதியை உபாஸிக்கின்றவனிடம் எந்த மந்த்ரமும் அருகில் அணுகமுடியாதென்பது ஸித்தமாகிறது, இந்த வைபவத்திலிருந்தும் ஈச்வரனல் கூடக் கொல்லமுடியாத கஜாஸுரனைக் கொன்ற காரணத்தால் ஈச்வரனுக்கும் மேலான தெய்வம். முதல் பூஜை மஹா கணபதிக்குத்தான் செய்யவேண்டும் என்ற பொருளை விளக்கும் மஹேச்வரன் என்ற பெயரும் கணபதிக்கு ஸிதகிக்கிறது.

நிற்க, மஹாகணபதியினுடைய ஸ்வரூபம் நிர்மலமான தேஜோரூபமானதினல், கொஞ்சமேனும் மாயா ஸம்பந்தமிலலாமல், மாயைக்கும் விலக்ஷணமான சைதன்யம் அதாவது, பரப்ருமமம் என்று சொல்லப்படும பொருளே மஹாகணபதி என்பது வெளியாகிறது. இவ்வித மஹிமை தங்கிய விக்னேச்வரரை ஸகல ப்ராணிகளும் இடைவிடாமல் த்யானம் செய்துவர

வேண்டும் என்பதே இந்த ச்லோகத்தின் தாத்பர்ய மாகும்.

---

समस्तलोकशंकरं निरस्तदैत्यकुञ्जरं
दरेतरोदरं वरं वरेभवक्त्रमक्षरम् ।
कृपाकरं क्षमाकरं मुदाकरं यशस्करं
मनस्करं नमस्कृतां नमास्करोमि भास्वरम् ॥ ३ ॥

ஸமஸ்தலோகஶங்கரம் நிரஸ்ததைத்யகுஞ்ஜரம்
தரேதரோதரம் வரம் வரேபவக்த்ரமக்ஷரம் ।
க்ருபாகரம் க்ஷமாகரம் முதாகரம் யஶஸ்கரம்
மநஸ்கரம் நமஸ்க்ருதாம் நமஸ்கரோமி பாஸ்வரம் ॥
॥ 3 ॥

மஹாகணபதி பதினான்கு லோகத்திலுமுள்ள ஜனங்களுக்கும் ஸுகத்தைக் கொடுக்கிறவர். கஜாஸுரனை ஸம்ஹாரம் செய்தவர். ஸகல ஜகத்தையும் தன் குக்ஷிக்குள் வைத்துக்கொண்டு ரக்ஷிக்கிறவரான திறல் பெருத்த வயிறுடன் கூடியவர். ஐராவதத்தின் முகத்தைப்போலுள்ள முகத்துடன் கூடியவர். தன்னை நமஸ்கரித்தவர்கள் என்ன அபராதம் செய்திருந்தாலும் அவைகளைப் பொறுத்துக்கொண்டு, அவர்களிடம் க்ருபைகொண்டு, அவர்களுக்கு இஹத்திலும் பரத்திலும் யசஸ்ஸைக் கொடுத்து, ஐஹிக ஆமுஷ்மிக ஸுகத்தையும் கொடுத்து அவர்களுடைய மனதை நல்வழியில் திருப்பி, க்ருதார்த்தர்களாகச் செய்யும் பரஞ்ஜோதிஸ்ஸே மஹாகணபதியினுடைய

ஸ்வரூபமாகும். எங்கும் நிறைந்ததாயும், அழிவற்றதாயும், அந்த ஜோதிஸ் விளங்குகிறது இதனால் இந்த தேவதையை, தினந்தோறும் நமஸ்கரித்துவர வேண்டும். இந்த ச்லோகத்தால், ப்ரணவம் என்ற மேலான மந்த்ரத்தின் பொருளே மஹாகணபதி என்பது வெளியாகிறது. ப்ரணவத்தின பெருமையோ, எல்லா மந்த்ரங்களுக்கும் மேலானது என்று வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இதனுடைய பொருள் என்னவென்று, பரமசிவன் ஸனகாதிகளிடம் விசாரிக்கும் காலத்தில், ப்ரணவம் என்ற மஹா மந்த்ரத்தில், அகாரம், உகாரம், மகாரம் என்ற மூன்று எழுத்துக்கள் அடங்கியுள்ளதாகையால், அகாரத்தால் பரமசிவனும், உகாரத்தால் பராசக்தியும், அந்த பரம சிவனும், பராசக்தியும் ஒன்ருகச் சேர்ந்த அகண்டமான சைதன்யம் மகாரமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. சிவனும், சக்தியும் ஒன்ருகச் சேர்ந்த ஸ்வரூபமே மஹாகணபதியாகும். வேதத்தினுடைய ஆதியிலும், முடிவிலும் ஓங்காரமானது பரம மங்களகரமாகச் சொல்லப்படுகிறது. மந்த்ர ஜப காலங்களிலும், ப்ரணவத்தை முதலில் சொல்லிக்கொண்டுதான் எல்லாவற்றையும் மஹான்கள் ஆரம்பிக்கிருர்கள். சப்தரூபமான கார்யத்தின் ஆரம்பத்தில் ஓங்காரத்தைச் சொல்கிருர்கள். அர்த்த ரூபமான க்ரியையை ஆரம்பிக்கும்பொழுது மஹாகணபதியைப் பூஜிக்கிருர்கள். க்ரியையின் ஆரம்பத்தில், கணபதியும், சப்தத்தின் ஆரம்பத்தில் ப்ரணவமுமானதால் ப்ரணவ மந்த்ரத்தின் பொருளே மஹாகணபதி என்று பரமேச்வ

ரன் தீர்மானம் செய்தார். கணபதியின் முகத்தைக் கவனித்தாலும், ப்ரணவத்தை எழுதினால் எப்படி இருக்குமோ, அவ்விதமே தோன்றும். ஆகையால் மஹாகணபதியை த்யானம் செய்துகொண்டு, ப்ரணவத்தை ஆவ்ருத்தி செய்கிறவர்கள் ஸர்வவிதமான ஸௌபாக்யத்தையும் அடைவார்கள்.

अकिंचनार्तिमार्जनं चिरंतनोक्तिभाजनं
पुरारिपूर्वनन्दनं सुरारिगर्वचर्वणम् ।
प्रपञ्चनाशभीषणं धनंजयादिभूषणं
कपोलदानवारणं भजे पुराणवारणम् ॥ ४ ॥

அகிம்சனார்திமார்ஜநம் சிரம்தநோக்திபாஜநம்
புராரிபூர்வநந்தநம் ஸுராரிகர்வசர்வணம் ।
ப்ரபஞ்சநாஶபீஷணம் தநம்ஜயாதிபூஷணம்
கபோலதாநவாரணம் பஜே புராணவாரணம் ॥4॥

தாத்பர்யம் :—

தன்னை ஜபித்தவர்களின் தாரித்ரிய பீடையை நாசம் செய்கிறவர். அறுதியான வேதவாக்யத்தால் துதிக்கப்படும் மஹிமையோடு கூடியவர். த்ரிபுராஸுரனை ஸம்ஹாரம் செய்த பரமேச்வரனுடைய ஜ்யேஷ்ட புத்ரன். தேவ சத்ருக்களான அஸுரர்களுடைய கர்வத்தை அடக்கியவர். லோகத்தை நாசம் செய்கிற யமனை, தன் பக்தர்களிடம் அண்டவிடாது தடுத்து, அவனுக்கும் ப . த்தைக் கொடுக்கக்

கூடியவர். அர்ஜுனன் முதலான வில்லாளிகளும் ஸகல கார்யத்திலும், கார்ய ஆரம்பத்தில் பூஜிக்கத் தகுந்த தேவதை. புராதனமான கஜஸ்வரூபம். ப்ராணிகளுடைய கபோல ப்ரதேசத்தில் ஏற்படும் ஸகல வித வ்யாதிகளையும் ஸ்மரண மாத்திரத்தில் நாசஞ் செய்து, பரம ஆரோக்யத்தைக் கொடுப்பவர். இவ்விதமாக மஹாகணபதியை பூஜிக்கவேண்டியது குடும்பிகளுக்கு மிக அவச்யமாகும். இதனால் ஒவ்வொரு குடும்பத்திலும் தாரித்ரியம் அண்டாமலிருக்க ஒவ்வொரு மாதத்திலும் சுக்ல சதுர்தசி புண்யகாலத்தில் மஹாகணபதியினுடைய வ்ரதானுஷ்டானமோ, அல்லது ஒவ்வொரு சுக்ரவாரத்திலும் கணபதி ஹோமமோ செய்வது முக்யமாகுமென்பது வெளியாகிறது.

---

नितान्तकान्तदन्तकान्तिमन्तकान्तकात्मजम्

अचिन्त्यरूपमन्तहीनमन्तरायकृन्तनम् ।

हृदन्तरे निरन्तरं वसन्तमेव योगिनां

तमेकदन्तमेकमेव चिन्तयामि संततम् ॥ ५ ॥

நிதாந்தகாந்த தந்தகாந்திமந்தகாந்தகாத்மஜம்

அசிந்த்யரூபமந்தஹீநமந்தராயக்ருந்தநம் ।

ஹ்ருதந்தரே நிரந்தரம் வஸந்தமேவ யோகிநாம்

தமேகதந்தமேகமேவ சிந்தயாமி ஸந்ததம் ॥ 5 ॥

தாத்பர்யம் :—

மிகவும் அழகான பல்வரிசையின் சோபையோடு கூடியவர். யமனுக்கும் யமனான பரமேச்வரனுடைய புத்ரன். மஹாகணபதியினுடைய சக்தியை மனதாலும் சிந்திக்கமுடியாது. தன் பக்தர்களுடைய விஷயத்தில் ஸகல விக்னங்களையும் நாசஞ் செய்கிறவர். யோகிகளுடைய ஹ்ருதயத்தில் எப்பொழுதும் வஸிப்பவர். யானை முகமானாலும், ஒரு தந்தத்துடன் கூடியவர். இவ்வித மஹிமையுள்ள மஹாகணபதியை எப்பொழுதும் சிந்திக்கவேண்டும். மஹாகணபதி மஹாமந்த்ரத்தை குருமுகமாக உபதேசம் செய்துகொண்டு, ஜபகாலத்தில் மஹாகணபதியை த்யானம் செய்கிறவர்களுக்கு, மஹாகணபதியினுடைய வரப்ரஸாதம் ஏற்படுவதுடன்கூட கணபதியினுடைய ஸாக்ஷாத்காரமும் ஏற்படும்.

महागणेशपञ्चरत्नमादरेण योऽन्वहं
प्रजल्पति प्रभातके हृदि स्मरन्गणेश्वरम् ।
अरोगतामदोषतां सुसाहितीं सुपुत्रतां
समाहितायुरष्टभूतिमभ्युपैति सोऽचिरात् ॥ ६ ॥

மஹாகணேஶபஞ்சரத்நமாதரேண யோந்வஹம்
ப்ரஜல்பதி ப்ரபாதகே ஹ்ருதி ஸ்மரங்கணேஶ்வரம்
அரோகதாமதோஷதாம் ஸுஸாஹிதீம் ஸுபுத்ரதாம்
ஸமாஹிதாயுரஷ்டபூதிமப்யுபைதி ஸோசிராத் ॥6॥

தாத்பர்யம் :—

இந்த பஞ்சரத்னம் என்ற மஹாகணபதியி னுடைய ஸ்தோத்திரத்தை ஒவ்வொரு தினத்திலும் அருணோதய காலத்தில் படுக்கையிலிருந்து எழுந் திருந்தவுடன் மஹாகணபதியை த்யானம் செய்து கொண்டு, எவர்கள் சொல்கிறார்களோ, அவர்கள் ஸகல ரோகத்திலிருந்தும், ஸகல பாபத்திலிருந்தும் விடுபடுகிறார்கள். தான் நினைத்த பாஷையில் கவன சக்தி உள்ளவர்களாக ஆகிறார்கள். ஸத்புத்ரரையும் அடைகிறார்கள். தீர்க்காயுஸ்ஸையும், அஷ்டைச்வர் யத்தையும் அடைவார்கள்.

ஆகையால், இந்த பஞ்சரத்னத்தை அருணோதய காலத்தில் பாராயணம் செய்கிறவர்களுக்கு கஜபதியி னுடைய ப்ரஸாதத்தால், ஸகலவித ஸம்பத்துகளும் ஏற்படுமென்பது ஸித்தமாகிறது.

ஓம் தத் ஸத்.

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய

## அபூர்வ க்ரந்த புஸ்தகங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ ஸௌந்தர்யலஹரீ | ... | 6 | 0 | 0 |
| ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்கம் | ... | 1 | 4 | 0 |
| கனகதாரா ஸ்தோத்ரம் | ... | 0 | 12 | 0 |
| லலிதா பஞ்சரத்னம் | ... | 0 | 5 | 0 |
| த்ரிபுரஸுந்தரி ஸ்தோத்ரம் | ... | 0 | 10 | 0 |
| கௌரீ தசகம் | ... | 0 | 8 | 0 |
| சாரதா புஜங்கப்ரயாதாஷ்டகம் | ... | 0 | 8 | 0 |
| ஆனந்தலஹரீ | ... | 0 | 8 | 0 |
| ஹனுமத் பஞ்சரத்னம் | ... | 0 | 4 | 0 |
| சங்கர விஜயம் | | 0 | 6 | 0 |

இதர புஸ்தகங்க

மஹிஷ மர்தினீ ஸ்தவம்

மீனாக்ஷி பஞ்சதசி ஸ்தோத்ரம்

ஸப்த ஸ்துதி

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தே

ஸ்ரீ துர்கா ஸ்தோத்ரம்

கிரி பிரஸ், பப்ளிஷர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை.